பதிவுக்கட்டில்

சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ,ஆ,ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

........

செயல்முறை ஆணை எண். 37614/டி3/2018 நாள். 16.07.2019

பொருள்: நிர்வாகம் - தொழில் நுட்பக் கல்வித் துறை – பணிமாற்றல் முறையில் பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல்.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.20448/டி4/2017 நாள் 19.09.2018
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.37614/டி3/2018 நாள். 12.11.2018

.........

பார்வை (1)-ல் காணும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 15.03.2016 அன்று நிலைத்தவாறு இளநிலை உதவியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.

பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, கீழ்க்காணும் பணியாளர்களுக்கு பணிமாற்றல் முறையில் கீழ்நிலை பதவியிலிருந்து இளநிலை உதவியாளர்களாக, தற்காலிக அடிப்படையில், பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கப்பட்டு, இத்துறையின்கீழ், உள்ள கீழ்க்கண்ட கல்லூரிகளில், பணியிடம் வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 TamilNadu Act No.14 of 2016, சட்டப்பிரிவு 28(1)-ன்கீழ், இளநிலை உதவியாளர் பதவியில் அவர்களது பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | பெயர், பதவி (ம) பணிபுரியும் அலுவலகம் திருவாளர்கள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | ஆ.மதுவன்,<br>இளநிலை உதவியாளர்,<br>டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி,<br>தரமணி, சென்னை | 19.11.2018 மு.ப. |
| 2. | சு.கிருஷ்ணகுமார்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசினர் பொறியியற் கல்லூரி,<br>ஸ்ரீரங்கம் | 23.11.2018 மு.ப. |

மேற்கண்ட இளநிலை உதவியாளர்களின் முதுநிலை மேற்காணும் வரிசைப்படி, அமையும். மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டும். அத்தகுதிகாண் பருவத்திற்குள், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- கே.விவேகானந்தன்
தொழில்நுட்ப கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திரு. ஆ.மதுவன்,
   இளநிலை உதவியாளர்,
   டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி,
   தரமணி, சென்னை (முதல்வர் வழியாக)

2. திரு கு.கிருஷ்ணகுமார்,
   இளநிலை உதவியாளர்,
   அரசினர் பொறியியற் கல்லூரி, ஸ்ரீரங்கம் (முதல்வர் வழியாக)

நகல்

1. முதல்வர்,
   டாக்டர் தர்மாம்பாள் அரசினர்
   மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி,
   தரமணி, சென்னை

2. முதல்வர்,
   அரசினர் பொறியியற் கல்லூரி,
   ஸ்ரீரங்கம்

தனியர்களின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. இயக்குநரின் மேஜைக்கு
4. கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)
5. துணை இயக்குநர் (நிர்) (பொ)
6. உதவி இயக்குநர்(நிர்வாகம்)
7. இயக்குநரின் நேர்முக உதவியாளர்
8. டி3 / இருப்புக்கோப்பு

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 17/7/19